# மெட்ரோ நிலையங்களில் கிருமி நாசினி தெளிப்பு

**சென்னை, மார்ச் 16–**

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க, சென்ட்ரல் மற்றும், விமான நிலைய மெட்ரோ நிலையங்களில், கிருமி நாசினி தெளிக்கப்பட்டது.

சென்னை, மெட்ரோ ரயில் நிறுவனம், பயணியர் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக, பல்வேறு வசதிகளை செய்து வருகிறது. இதையொட்டி, கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க, மெட்ரோ நிலையங்களில், கிருமி நாசினி தெளிக்கவும், பயணியருக்கு விழிப்புணர்வு முகாம் நடத்தவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



'கொரோனா' வைரஸ் பரவுவதை தடுக்க, கிருமி நாசினி தெளிக்கும் பணியில் நேற்று ஈடுபட்ட ஊழியர்கள். இடம்: சென்ட்ரல் மெட்ரோ நிலையம்.

இதையொட்டி, சென்ட்ரல் மற்றும் விமான நிலைய மெட்ரோ நிலையங்களில், நேற்று, கிருமி நாசினி தெளிக்கப்பட்டது. கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க, பயணியருக்கு விழிப்புணர்வு ஆலோசனை வழங்கப்பட்டது. மொபைல் போனில், குறுஞ்செய்தியாகவும் விழிப்புணர்வு ஆலோசனை வழங்கப்பட்டது.